செய்தி வெளியீடு எண் : 340 நாள்: 07.03.2022

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட, உக்ரைனில் சிக்கியுள்ள தமிழக மாணவர்களை மீட்பதற்கான நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஐஏஎஸ் அதிகாரிகள் அடங்கிய குழுவினர் மாண்புமிகு பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு திருச்சி சிவா அவர்கள் தலைமையில், மாண்புமிகு தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ கே எஸ் விஜயன் அவர்கள் முன்னிலையில் ஆலோசனை கூட்டம் இன்று (07.03.2022) புது தில்லி தமிழ்நாடு இல்லத்தில் நடைபெற்றது. இக்குழுவின் உறுப்பினர்கள் மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, திரு. எம். எம். அப்துல்லா மற்றும் தமிழ்நாடு இல்லத்தில் கூடுதல் தலைமை செயலாளர் /தலைமை உள்ளுறை ஆணையர் திரு. அதுல்ய மிஸ்ரா இஆப, உள்ளுறை ஆணையர் திரு ஆஷிஷ் சட்டர்ஜி, இஆப மேலாண்மை இயக்குனர் திரு. ஏ.கே.கமல் கிஷோர், இஆப இணை மேலாண்மை இயக்குனர் திரு. அஜய் யாதவ், இஆப மேலாண்மை இயக்குனர் திரு கோவிந்தராவ் இஆப, ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்திற்கு பின் மாநிலங்களவை உறுப்பினர் திரு திருச்சி சிவா கூறுகையில் உக்ரேனில் இருந்து வருகை தரும் மாணவர்களை உடனுக்குடன் தமிழ்நாட்டிற்கு அனுப்புவதற்கு தேவைக்கேற்ப தனி விமானம் ஏற்பாடு செய்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது புதுடெல்லி வரும் மாணவர்களை தமிழ்நாடு இல்லத்தில் தங்கவைக்கப்பட்டு உணவு வழங்கி தேவையான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது உக்ரைனில் இருந்து 1196 மாணவர்கள் இதுவரை அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

உக்ரைனில் இருந்து சொந்த செலவில் 255 ஏற்கனவே வந்தடைந்துள்ளனர் இது தவிர தற்போது தமிழ்நாடு இல்லத்தில் தங்கியுள்ள 136 மாணவர்களுக்கு விமான டிக்கெட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள மாணவர்களை சிறப்பு குழு மாணவர்களின் தேவைகளை சந்தித்து கேட்டறிந்தனர். தங்களுக்கு தமிழ்நாடு செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாணவர்கள் நன்றி தெரிவித்தனர்.

மேலும் உக்ரைனில் இருந்து 200 மாணவர்கள் தாயகம் திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. உக்ரைனில் இருந்து தமிழக மாணவர்கள் அனைவரும் தமிழ்நாடு திரும்பும் வரை மீட்பு குழுவினர் புதுதில்லியில் முகாமிட்டு கண்காணிக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் தங்கியுள்ள மாணவர்கள் அனைவரும் தமிழக அரசின் செயல்பாட்டை பாராட்டி நன்றி தெரிவித்தனர் என்று கூறினர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9